**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | கருப்புசாமி | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**17.10.2023 OS No. 11/2020 வா.சா.1** கருப்புசாமி **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. 1ம் வாதி என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். தாவா வழக்கில் தனசேகரன்தான் 1ம் வாதியாக உள்ளார் என்றால் சரிதான். 1ம் வாதி தனசேகரனை விசாரிக்காமல் என்னை சாட்சியாக விசாரிப்பதற்கு ஏதாவது தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. என்னை கிராமத்தில் முத்து என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். எனக்கும் 1ம் வாதி தனசேகரனுக்கு பூர்விகம் கணக்கன்குடி என்றால் சரியல்ல. தூாதை கிராமம் ஆகும். எனக்கு பூர்விகம் தூாதை என்று தவறாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3-ம் வாதி மனோகரன், 4ம் வாதி குமார் ஆகியோர்களின் பூர்விகம் மானாமதுரை அருகில் உள்ள வேலுர்முருகபாஞ்சான் என்றால் சரிதான்.

2. நானும், எனது முன்னோர்களும் தூாதை கிராமத்தில் எத்தனை வருடமாக குடியிருக்கிறோம் என்றால் எனக்கு தெரிய 4 பரம்பரையாக உள்ளோம். தூாதை கிராமத்தில் எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை குடும்பங்கள் உள்ளனர் என்றால் 15-20 குடும்பங்கள் இருக்கும். அகமுடையவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை குடும்பங்கள் இருப்பார்கள் என்றால் 100லிருந்து 200 குடும்பங்கள் இருக்கும். எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 50 குடும்பத்திற்கு மேல் இருப்பார்கள் என்றால் சரிதான். எனது பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எங்கள் சமூகம் மற்றும் சேர்வர்கள் சமூகத்தைச் சேர்ந்த 17 குடும்பத்தார்கள் தூாதை கிராமத்தில் இருப்பதாக கூறியிருப்பதில் அந்த 17 குடும்பத்தார் யார் யார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. எங்கள் சமூகம் மற்றும் சேர்வர்கள் சமூகத்தைச் சேர்ந்த 17 குடும்பத்தார்கள் தூாதை கிராமத்தில் இருப்பதாக கூறியிருப்பதற்கு என்ன காரணம் என்றால் எங்கள் இனத்தைச்சேர்ந்தவர்கள் 17 குடும்பத்தார்கள் உள்ளார்கள். அதில் எங்கள் சாமி கும்பிடுபவர்கள் 5 குடும்பத்தார்கள் மட்டும்தான். தாவா வழிபாடு எந்த வருடம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. முன்னோர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தாவா கோவிலில் உருவ அமைப்பு இல்லை என்றால் சரிதான். கோவில் புல எண்ணிற்கு

வடக்கே, தெற்கே யார் உள்ளார்கள் என்றால் வடக்கே ___ பிச்சை, தெற்கே- பாக்கியம் உள்ளார்கள்.

4. வடக்கே உள்ள பிச்சையும், தெற்கே உள்ள பாக்கியமும் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 17 குடும்பத்தார்களும் எங்களுக்கு வழக்கு தாக்கல் செய்ய எழுத்து பூர்வமாக ஏதேனும் அதிகாரம் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. இது தொடர்பாக கிராமத்தில் கூட்டம் கூடி எந்த முடிவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா கோவிலுக்கு ஆதிதிராவிடர் சமூகத்தைச்சேர்ந்தவர்கள் தான் பரம்பரையாக பூசாரியாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தற்சமயம் தாவா கோவிலுக்கு பூசாரியாக யார் உள்ளார் என்றால் 1-ம் பிரதிவாதி முத்துகருப்பன் உள்ளார்.

5. முத்துக்கருப்பன் உடன்பிறந்த சகோதரர்தான் 2-ம்பிரதிவாதி விலங்கன் என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள் கிருஷ்ணன், சங்கையா 1,2 பிரதிவாதிகளின் பங்காளிகள் என்றால் எனக்கு தெரியாது. 4-ம் பிரதிவாதி சங்கையாவின் அப்பா பெயர் விலங்கன் என்றால் எனக்கு தெரியாது. 3-ம் பிரதிவாதியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. 3,4 பிரதிவாதிகளும் தாவா கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், தற்சமயம் தொழில் நிமித்தமாக வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் துாதை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், தற்சமயம் தொழில் நிமித்தமாக வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. தாவா கோவில் சம்மந்தமாக எங்கள் தரப்பில் எத்தனை சாமியாடிகள் உள்ளார்கள் என்றால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு சாமியாடி உள்ளார்கள். மொத்தம் 5 சாமியாடிகள்தான் உள்ளோமா என்றால் சாமி கும்பிடும் குடும்பங்கள் 5 குடும்பங்கள் ஆகும். சாமியாடி மட்டும் 17 குடும்பங்கள் உள்ளோமா என்றால் 15 பேர் சாமியாடிகள் உள்ளோம். தாவா கோவிலுக்கு உருவங்கள் கிடையாது என்றாலும், சுற்றிலும் காம்பவுண்ட் கிடையாது என்றாலும் சரிதான். உருவங்கள் இல்லாத நிலையில் எதை வைத்து சாமியாக வழிபடுகிறோம் என்றால் ஒரு வின்னி மரம் உள்ளது. அந்த மரத்தைதான் பாரம்பரியமாக சாமி கும்பிடுகிறோம்.

7. வின்னி மரத்தை தவிர வேறு மரங்கள் உள்ளதா என்றால் வேறு மரங்கள் உள்ளது. ஆனால் வின்னி மரத்தைதான் சாமியாக கும்பிடுகிறோம். இது தவிர புளியமரம், பனைமரம் உள்ளதா என்றால் உள்ளது. வின்னி மரத்தை வைத்துதான் மணி அடித்து, மாலை அணிவித்து சாமிகும்பிடுகிறோம் என்று எனது பிராதிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரில் சங்கையா கோவில் உள்ளதா என்றால் உள்ளது. எங்கள் ஊரில் சங்கையா கோவிலைதான் நாங்கள் குலதெய்வமாக வைத்து சாமிகும்பிட்டு வருகிறோம் என்றால் நாங்கள் இருபிரிவுகளாக

உள்ளோம். ஒரு பிரிவினர் சங்கையா கோவிலை வைத்தும், மற்றொரு பிரிவினர் விலங்குகருப்பண சாமியாக வைத்தும் சாமிகும்பிடுகிறோம்.

8. எங்கள் கிராமத்தைச் சேர்ந்த அகமுடையார்கள் முனியாண்டி கோவிலை குலதெய்வமாக சாமிகும்பிட்டு வருகிறார்கள் என்றால் துணைதெய்வமாக வைத்து கும்பிட்டு வருகிறார்கள். எங்கள் கிராமத்தைச் சேர்ந்த யாதவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சங்கையா கோவிலைதான் கும்பிட்டு வருகிறார் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் ஒரு பிரிவினர் சங்கையா கோவிலை வைத்தும், மற்றொரு பிரிவினர் விலங்குகருப்பண சாமியாக வைத்தும் சாமிகும்பிடுகிறோம். எங்கள் கிராமத்தைச் சேர்ந்த அகமுடையார்கள் முனியாண்டி கோவிலை குலதெய்வமாக சாமிகும்பிட்டு வருகிறார்கள் என்றாலும் துணைதெய்வமாக வைத்து கும்பிட்டு வருகிறார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. எனது பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நாங்களும், அகமுடையார் ச மூகத்தைச் சேர்ந்தவர்களும் குலதெய்வமாக தாவா கோவிலையும், அகமுடையார் ச மூகத்தைச் சேர்ந்தவர்கள் துணை தெய்வமாக முனியாண்டிகோவிலையும், கும்பிட்டு வருவதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா விலங்ககருப்பண சாமி கோவில் சம்பந்தப்பட்ட பூஜை பொருட்கள் 1,2 பிரதிவாதிகளின் குடும்பத்தின் கைவசம் உள்ளது என்றால் பூசாரி என்பதால் அவர்களிடம் உள்ளது. சாமியாடும் பொருட்கள் எங்களிடம் உள்ளது. பூஜை பொருட்கள் மட்டுமல்லாமல் சாமியாடி பொருட்களும் 1,2 பிரதிவாதிகளின் கைவசம் உள்ளது என்றால் பூஜை பொருட்கள் அவர்களிடமும், சாமியாடும் பொருட்கள் எங்களிடமும் உள்ளது.

10. சாமியாடும் பொருட்கள் எங்களிடமும் உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கோவில் சம்பந்தப்பட்ட பூஜைபொருட்கள் 1,2 பிரதிவாதிகளிடமும் சாமியாடும் பொருட்கள் எங்களிடம் உள்ளதாக பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ அவ்வாறு சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா கோவில் சம்பந்தப்பட்ட பூஜைபொருட்கள், சாமியாடும் பொருட்கள் பூஜை பெட்டியுடன் பூசாரியிடம்தான் உள்ளது என்றால் பூஜைபொருட்கள் பூசாரியிடமும், சாமியாடும் பொருட்கள் எங்களிடம் உள்ளது.

11. பூஜை பெட்டி 1,2 பிரதிவாதிகளின் கைவசம் உள்ளது என்றால் பூசைக்கூடை என்று சொல்வார்கள். அதில் பொங்கல்பானை, கரண்டி ஆகியவை இருக்கும். அந்த பூசைக்கூடைதான் 1,2 பிரதிவாதிகளிடம் உள்ளது. அரிவாள், கம்பு, சாட்டை, கச்சை கட்டுவது உள்ளிட்டவை தகரப்பெட்டியில் இருக்கும் அந்த சாமிபெட்டி எங்களிடம் உள்ளது. சாமி பெட்டியான தகரப்பெட்டி எங்க கைவசம் உள்ளது என்று நான் தற்போது

கூறிய சங்கதியை எனது பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** சொல்லியுள்ளேன். பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எந்த இடத்தில் நான் சாமிபெட்டி எங்களிடமும், பூசைக்கூடை 1,2 பிரதிவாதிகளிடமும் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்பதை சொல்லமுடியுமா என்றால் **(சாட்சியிடம் பிரமாண வாக்கு மூலம், பிராது படிக்க கொடுக்கப்பட்டது. )** பிராது பாரா 8ல் சொல்லப்பட்டுள்ளது. பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 5-ல் கடைசி பத்தியில் சொல்லியுள்ளேன்.

12. 1,2 பிரதிவாதிகள் பரம்பரை பூசாரியாக இருப்பதில் அவர்களுக்கு சம்பளமோ, மானியமாக நிலமோ கொடுக்கவில்லை என்றால் அந்த கோவில் இடத்தை அவர்களுக்கு விட்டுக்கொடுத்துள்ளோம். 1,2 பிரதிவாதிகளுக்கு பூசாரி சம்பளம் இல்லை என்றால் சரிதான். தாவா விலங்க கருப்பண சாமி கோவிலும், அதற்கு வடக்கே, தெற்கே உள்ள இடமும் பூசாரி குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் கோவிலுக்காக விடப்பட்ட இடத்தை 1,2 பிரதிவாதிகள் பெயருக்கு தற்போது மாற்றிவிட்டார்கள்.

13. தாவா இடத்திற்கு வடக்கேயும், தெற்கேயும் உள்ள இடத்தை பூசாரி குடும்பத்தார்க்கு விட்டுக்கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை எனது பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். கோவில் இடமும், வடக்கேஉள்ள இடமும், தெற்கே உள்ள இடமும் பூசாரி குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் அது பொய்யாகும். அந்த அடிப்படையில்தான் தாவா கோவில் பூசாரி குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல். எங்கள் குடும்பத்திலோ, அகமுடையார் குடும்பத்திலோ விலங்குகருப்பண சாமி என்ற சாமி பெயரை பொறுத்து விலங்கன் என்ற பெயர் எதுவும் வைக்கப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் கருப்புசாமி என்று பெயர் வைப்போம்.

14. விலங்குகருப்பண சாமி கோவிலில் எத்தனை பரிகார சாமி உள்ளது என்றால் எத்தனை சாமி என்று குறிப்பிட்டுசொல்லமுடியாது. கருப்புசாமி, ராக்காயி, ராக்கச்சி, பூச்சியம்மாள், நொண்டிச்சாமி, அக்கினிவீரன் என்ற பல பரிகார சாமிகள் உள்ளது. மொத்தம் 21 சாமிக்கு மேல் உள்ளது. நாங்களும், அகமுடையார் சமுதாயத்தினரோ எங்கள் முன்னோரோ எந்த காலத்திலும் தாவா கோவிலில் சாமியாடியது இல்லை என்றால் சரியல்ல. தாவா கோவிலை பொறுத்தவரை வழிபடுவதற்கு உரிமை உள்ளது என்றாலும், சாமியாடுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அகமுடையார் சமுதாயமோ, எங்கள் சமுதாயமோ எந்த உரிமையும் இல்லாத நிலையில் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் நாங்கள் வழக்கு தாக்கல் செய்ய எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல.

15. தாவா விலங்குகருப்பண சாமி கோவிலில் 1,2 பிரதிவாதிகளின் சமுதாயத்திற்கு

மட்டும்தான் பாத்தியம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் குடும்பத்தினர்தான் பரம்பரையாக தாவா கோவிலில் வழிபட்டு சாமியாடி, கரகம் எடுத்து ஆடி வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் குடும்பத்தினர்தான் பூஜை பெட்டி எடுத்து வைகை ஆற்றில் கரகம் எடுத்து ஆடி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா விலங்குகருப்பணசாமி கோவிலில் அன்றாட பராமரிப்பு வேலைகளை 1,2 பிரதிவாதிகள்தான் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மாசி களரி, வைகாசி திருவிழாக்களை 1,2 பிரதிவாதிகள்தான் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் தொன்றுதொட்டு செய்து வரும் செயல்களை தடுக்க வேண்டி 3.3.2019ம் தேதி எங்களால் வட்டாட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டது என்றால் நாங்கள் சாமியாடுவதை தகராறு செய்ததால் தான் நாங்கள் மனு கொடுத்தோம்.

16. எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாத நிலையில் 1,2 பிரதிவாதிகள் குடும்பத்தினர் சாமி கும்பிடுவதை தடுக்க வேண்டி பொய்யாக காவல்துறையிலும், வருவாய்துறையிலும் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு இல்லாத உரிமையை பெற வேண்டி அரசு அதிகாரிகளிடம் முறையிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் தாவா கோவிலை பொறுத்து எங்களுக்கு எந்த உரிமையும் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. தாவா விலங்கு கருப்பணசாமிகோவிலில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாத நிலையில் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்களது வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.